# எடப்பாடியின் வாக்குறுதிகளை மக்கள் நம்பத் தயாராக இல்லை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

உலக நாடுகள் பலவற்றிற்குச் செல்லும்போது, அங்கே இருக்கின்ற தமிழர்களைப் பார்க்கும்போது, "தி.மு.க.வினால்தான் நான் இங்கே வந்து வேலை செய்கிறேன். கலைஞரால்தான், எனக்கு வேலை கிடைத்திருக்கிறது. எனக்கு இட ஒதுக்கீடு கொடுத்து, வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தார்" என்று சொல்கிறார்கள். உலகம் முழுவதும் இன்றைக்கு எங்கே போனாலும், தி.மு.க.பற்றித்தான் புகழ்ந்து பேசிக் கொண்டு இருக்கிறார்கள். தி.மு.க. தான் நமக்கு உந்து சக்தியாக இருக்கிறது என்கிற உணர்வு வந்திருக்கிறது நாட்டில். அதனால், புதிதாக யார் வந்தாலும், தி.மு.க.வை எதிர்த்தால்தான், தி.மு.க.வை விமர்சனம் செய்தால்தான் வளர முடியும் என்று நினைக்கிறார்கள். அது தவறு. தி.மு.க. ஒரு ஆக்கச் சக்தி. இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் வந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணமே தி.மு.க.தான். தி.மு.க. ஓர் ஆக்க சக்தியாக இருந்து, தி.மு.க. ஆட்சியில் இருந்த நேரத்தில் கொண்டு வந்ததால்தான்.

**நெறியாளர்:** "Stalin is more Dangerous" என்பது ஒரு ஸ்டேட்மெண்ட். அந்த ஸ்டேட்மெண்ட்டை எச். ராஜா சொல்லும்போது, அவர் என்ன உணர்வில் சொன்னார் என்று தெரியவில்லை. அப்பொழுது நீங்கள் அதிகாரத்திலேயும் இல்லை. அந்த ஸ்டேட்மெண்ட்டைச் சொல்லும்போது உங்களுக்கு என்ன உணர்வு வந்தது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** அவர் என்ன அர்த்தத்தில் சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. என்ன அர்த்தத்தில் சொல்லிருப்பார் என்றும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், அதை நான் பெருமையாக நினைக்கிறேன்.

ஏனென்றால், ஒரு பொறுப்பில் இருக்கும்போது, அதை அவர் சொல்லும்போது, கலைஞரை விட டேஞ்சரஸ் என்று சொல்லும்போது, கலைஞர் நிறைய செய்திருக்கிறார். இப்பொழுது அதைவிட நாமும் அதிகமாகச் செய்ய வேண்டும் எதிர்பார்க்கிறாரா? அப்படித்தான் நானும் நினைக்கிறேன். இன்னும் அதைச் சொல்லட்டும், நான் இன்னும் மேற்கொண்டு என்னுடைய பொறுப்புணர்வை நான் வெளியே காட்டுகிறேன்.

### டபுள் இன்ஜினில் என்ன வளர்ச்சியை பார்த்துவிட்டார்கள்?

**நெறியாளர்:** பிரதமர் தொடங்கி, டில்லியிலிருந்து எந்தத் தலைவர்கள் வந்தாலும், டில்லியிலேயும், ஒன்றியத்திலேயும் ஒரே ஆட்சி இருக்க வேண்டும். தமிழ்நாட்டிலும், அதே ஆட்சி இருக்க வேண்டும். டபுள் என்ஜின் சர்க்கார் என்று பேசுகிறார்கள். வளர்ச்சி அதனால் குன்றிப் போய்விட்டது. டில்லியோடு இணக்கமாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்களே?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** மணிப்பூரில் டபுள் இன்ஜின் தான்; பீகாரில் டபுள் இன்ஜின் தான்; பிஜேபி ஆளக்கூடிய மாநிலங்களில் டபுள் இன்ஜின் தான். டபுள் இன்ஜின் மாநிலத்திலிருந்து என்ன வளர்ச்சியைத் பார்த்துவிட்டார்கள்?

டபுள் இன்ஜின் இல்லாத தமிழ்நாட்டில், இன்றைக்கு நாங்கள் சாதனை செய்திருக்கிறோம். அதே மாதிரி கேரளா ஆகட்டும். அதாவது பி.ஜே.பி. ஆட்சி இல்லாத மாநிலங்களில் பார்த்தீர்கள் என்றால், அங்கேதான் வளர்ச்சி இருக்கிறதே தவிர, பி.ஜே.பி. ஆளக்கூடிய மாநிலங்களில் எங்கேயும் வளர்ச்சி இல்லை. அது ஒரு டப்பா இன்ஜின்தான்.

**நெறியாளர்:** மக்களுக்கு ஒரு சர்ப்ரைஸா ஒன்று நடந்தது. திடீரென்று ஒரு நாள் காலையில் 5000 ரூபாய் பணம், ஒரு கோடியே 31 லட்சம் பேரின் கணக்கில் வந்து விழுந்தது. அது எப்படி ரகசியமாக வைத்திருந்து, விடியற்காலையில் ஒரு சர்ப்ரைஸ் கொடுத்தீர்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** எங்களுக்கு ஏற்கனவே செய்தி கிடைத்தது. இப்படி நீதிமன்றத்துக்குப் போகப் போகிறார்கள். இந்தத் திட்டத்தை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும். தேர்தலுக்காக இதைப் பயன்படுத்துகிறோம் என்று அவர்கள் பயந்து போய், வழக்குத் தொடுப்பதற்கு முயற்சி செய்தார்கள். இந்தச் செய்தியை கேள்விப்பட்வுடனே, நான் அதிகாரிகளை அழைத்துப் பேசி, உடனே இதை எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றி ஆலோசனை செய்தோம்.

எனக்கும், அந்தத் துறையினுடைய அதிகாரிக்கு மட்டும்தான் தெரியும். எவ்வளவு போடுவது? எப்பொழுது போடுவது? என்று.

ஆலோசனை செய்தபடி, உடனடியாக ஒவ்வொருவருடைய வங்கிக் கணக்கிலும் அந்தப் பணத்தைப் போட்டோம். அதற்குப் பிறகு 6.30 மணிக்கு மேல், நான் அது சம்பந்தமாக ஒரு வீடியோ செய்தி வெளியிட்டு, அது வெளியில் வந்தது.

### தலைவர் கலைஞரிடம் கற்றுக்கொண்டது!

**நெறியாளர்:** ஒரு திட்டத்தை எடுத்துக் கொண்டால், அதை, மிக நுணுக்கமாக சில நேரங்களில் பின்பற்றுவதைப் பார்க்க முடிகிறது. ஒரு பெண் வீடு கேட்டு, வீடு இல்லை என்று சொல்லி, கோரிக்கை வைக்கிறார். அவருக்கு வீடு 'சாங்ஷன்' செய்கிறீர்கள். அதற்குப் பிறகு, திருநெல்வேலிக்குச் செல்லும்போது, அந்த வீட்டைப் போய்ப் பார்க்கிறீர்கள். அந்த வீட்டைக் கட்டுகிறார்களா என்று பின்பற்றிப் பார்க்கிறீர்கள். அதற்குப் பிறகு அந்த வீட்டிற்குப் போகிறீர்கள். ஒரு விஷயத்தைத் தொடர்ந்து பின்பற்றுகிறீர்கள். இந்தப் பின்பற்றுதல் என்பதை இந்தத் திட்டத்திற்கு மட்டும் செய்கிறீர்களா? அல்லது பொதுவாக உங்களுடைய இயல்பா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பொதுவாகவே என்னுடைய இயல்பு அதுதான். தலைவரிடம் கற்றுக் கொண்டது அது. தலைவர் ஒரு காரியத்தை எங்களிடம் செய்யச் சொல்லுவார். அப்படி எங்களிடம் சொல்லிட்டு, அதற்கு முன்பே தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு பேசிவிடுவார்.

உதாரணத்திற்கு, நான் சென்னை மாநகராட்சி மேயராக இருந்தபோது, பேப்பரில் ஒரு செய்தி வரும். அதைப் பார்த்துவிட்டு, என்னிடம் சொல்லுவார். சரிப்பா, நான் அதைக் கவனிக்கிறேன் என்று சொல்வேன். ஆனால், எனக்கு முன்பே, மாநகராட்சி ஆணையரிடம் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு, அந்த விஷயத்தைப்பற்றி பேசியிருப்பார்.

இதை அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்டேன். அந்த அடிப்படையில்தான், எந்த வேலையாக இருந்தாலும், நான் உடனே பார்த்து, தினேஷிடம் சொல்லிருக்கிறேன். சம்பந்தப்பட்ட என்னுடைய செயலாளர்களிடம் சொல்லியிருக்கிறேன். அந்த அதிகாரியை நானே தொலைப்பேசியில் தொடர்பு கொள்வேன்.

உதாரணமா சுற்றுப்பயணம் செய்யும்போது பெட்டிஷன் கொடுப்பார்கள். அதை வாங்கிப் பார்ப்பேன். சில பெட்டிஷன் பெரிய 'ஸ்கீமாக' இருக்கும். நீதிமன்றப் பிரச்சினை அல்லது காவல் நிலையப் பிரச்சினைகள் இருக்கும். சில பெட்டிஷன், படித்து விட்டு, வேலையில்லாமல் இருக்கின்ற, பாதிக்கப் பட்ட பெண்ணாக இருக்கும். அந்தப் பெட்டிஷனைப் பார்த்தவுடனே, அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதைக் கொடுத்து, இந்த மனுவைப் பாருங்கள் என்பேன். உடனே மாவட்ட ஆட்சியர் , நான் நிகழ்ச்சி முடிந்து போவதற்குள், அந்தப் பெண்ணுக்கு வேலை கொடுத்தாகிவிட்டது; அல்லது வீடு கொடுத்தாகிவிட்டது என்று சொல்வார். அவர்களுடைய தொலைப்பேசி எண்ணைக் கேட்டு வாங்கி, அவர்களைத் தொடர்பு கொண்டு பேசுவேன். அல்லது அந்தப் பக்கம் செல்லும்போது, அவர்களை நேரில் சென்று பார்ப்பேன். அப்படியே பழகிவிட்டேன்; தொடர்ந்து அதுபோன்றே செயல்பட்டு வருகிறேன்.

### பள்ளிக் குழந்தைகள் படிப்பதற்கான நிதியை நிறுத்தும் பா.ஜ.க. அரசு!

**நெறியாளர்:** இந்தத் தேர்தலினுடைய ஒரு முக்கியமான பேசு பொருள், நீங்கள் பி.ஜே.பி.க்கு எதிராக பேசுகிற ஒன்று. குறிப்பாக பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா போன்றவர்களைப்பற்றி பேசும்போது, கடுமையாக விமர்சனம் செய்கிறீர்கள். தமிழ்நாட்டை வஞ்சிக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். ஒரு முதலமைச்சராக, உங்களை மிகவும் பாதித்த விஷயம் எது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பள்ளி குழந்தைகள், அவர்கள் படிப்பதற்காக ஒன்றிய அரசு கொடுக்கின்ற நிதி – இந்தியைக் கற்றுக் கொண்டால்தான், அந்த நிதியைக் கொடுப்போம் என்று சொன்னார்கள் பாருங்கள், அது என்னை மிகவும் பாதித்த விஷயம். ஏனென்றால், படிக்கின்ற பிள்ளைகளுக்கு நிதி தருகின்ற எத்தனையோ அரசு, ஒன்றியத்தில் இருந்திருக்கிறது. அவர்கள் எல்லாம், இந்தியைக் கற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள் என்று கட்டாயப் படுத்துவார்களே தவிர, இப்பொழுது உள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசு போன்று நிதியை நிறுத்தியது கிடையாது.

**நெறியாளர்:** இந்தியைத் திணிக்க முயற்சி செய்வார்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** திணிக்க முயற்சி செய்வார்கள். ஆனால், இப்போது உள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசு நிதியே கொடுக்க மாட்டேன் என்று சொன்னதுதான் என்னை மிகவும் பாதித்தது.

### நாகரிக அரசியலை தொடர்ந்து செய்வேன்!

**நெறியாளர்:** நாகரிக அரசியல் செய்கிறீர்கள் நீங்கள் என்று உங்கள்மீது ஒரு குற்றச்சாட்டு உள்ளதே?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** நாகரிக அரசியல் செய்வதைக் குற்றச்சாட்டு என்று சொன்னால், அதைத் தொடர்ந்து நான் செய்வேன். கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவுடன், தலைவர் நினைவிடத்திற்குச் சென்று மரியாதை செய்துவிட்டு, செய்தியாளர்களைச் சந்தித்தபொழுது நான் சொன்ன முதல் வார்த்தை என்னவென்றால், "எனக்கு வாக்களித்தவர்கள் மகிழ்ச்சி அடையவேண்டும்; எனக்கு வாக்கு அளிக்கத் தவறியவர்கள், 'இவருக்கு வாக்களிக்காமல் விட்டு விட்டோமே என்று வருந்தவேண்டும்" என்று சொன்னேன். அதைத்தான் நான் பெருமையாக நினைக்கிறேன்.

**நெறியாளர்:** பொதுவாக பல அரசியல்வாதிகளுக்கு, அதிகாரம் கைக்கு வந்தவுடன், அந்த அதிகாரத்தைத் தங்களை வளர்த்துக் கொள்ள பயன்படுத்துவார்கள். அல்லது தங்களுடைய எதிரி களை ஒழிப்பதற்கு அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவார்கள். ஆனால், நீங்கள் அப்படி இல்லை என்று சொல்கிறீர்கள். அந்தப் பண்பு உங்களுக்கு எப்படி வந்தது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** அது என்னுடைய அப்பாவிடம் இருந்து வந்தது. அதெல்லாம் நல்ல பண்புதானே!



### தமிழ்நாட்டின் உரிமை பாதுகாக்கப்பட்டது!

**நெறியாளர்:** தொகுதி மறு வரையறை சட்டம் தோல்வி அடைந்திருக்கிறது. இதற்கு எதிராக முதலில் ஒரு போர்க்கொடி உயர்த்தியது தமிழ்நாடுதான். நீங்கள்தான் 'ஒரு பைனல் வார்னிங்' என்று சொன்னீர்கள்.. அந்த மசோதாவின் நகலை தீ வைத்து எரிக்கவும் செய்தீர்கள். ஒரு பெரிய கிளர்ச்சி வெடிக்கும் என்றும் அறிவித்தீர்கள். அந்த சட்ட மசோதா தோல்வி அடைந்தவுடன், அதைக் கொண்டாடவும் செய்தீர்கள். பட்டாசு வெடித்து இந்தப் போராட்டத்தை பெரிதாக செய்யவேண்டும் என்று ஏன் நினைத்தீர்கள். இவ்வளவு பெரிய வெற்றி கிடைக்கும் என்று நினைத்தீர்களா, இந்தக் கிளர்ச்சியை அறிவித்தபொழுது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** இந்தப் போராட்ட நாளன்று நான் கருப்புச் சட்டை அணிந்தேன். தி.மு.க. தோழர்கள், தோழமைக் கட்சிக்காரர்களும் கருப்புச் சட்டை அணிந்தார்கள். அன்றைக்கு நான் நாமக்கல்லில் இருந்தேன். அங்கே இயக்கத் தோழரின் வீட்டின் அருகே கருப்புக் கொடி ஏற்றி வைத்து, அந்த மசோதாவின் நகலை தீ வைத்து எரித்தேன். அந்தத் தீ தமிழ்நாடு முழுவதும் நன்றாகப் பற்றிக் கொண்டது. அன்று மாலை செய்தி வந்தது, அந்த மசோதா தோற்றுப் போய்விட்டது என்று. "தமிழ்நாட்டின் உரிமை பாதுகாக்கப்பட்டு இருக்கிறது" என்பதை நினைத்து மகிழ்ச்சியடைந்தேன்.

### பிரதமர் மோடிக்கு பெரிய தோல்வி!

**நெறியாளர்:** இந்தக் கிளர்ச்சி அறிவித்தபொழுது, இந்தியா முழுவதும் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றுபடுவார்கள், இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முன் வருவார்கள் என்று எதிர்பார்த்தீர்களா? மோடி அரசு தோல்வியைச் சந்திக்கும், அந்த மசோதா தோல்வியடையும் என்று நினைத்தீர்களா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** அது என்ன நிலை வருதோ, இல்லையோ! தமிழ்நாட்டைப் பொறுத்த வரைக்கும் நாங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதாக முடிவு செய்தோம். இது சம்பந்தமாக ராகுல் காந்தியிடம் பேசினேன். அன்னை சோனியா காந்தியிடம் பேசினேன். காங்கிரஸ் கட்சியின் தலைவர் கார்கேவிடம் பேசினேன். அதுமட்டும் இல்லாமல், அகிலேஷிடம் பேசினேன். மம்தா அவர்களிடம் பேசினேன். தெலுங்கானா முதலமைச்சரிடம் பேசினேன். கேரளா முதலமைச்சரிடம் பேசினேன். எல்லோரிடமும் பேசி ஒருங்கிணைத்தோம். அதுமட்டும் இல்லாமல், எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்பு கொண்டு, அது ஒரு லாபியைச் செய்தோம்.

அதனால், மோடியைப் பொறுத்தவரைக்கும் இதில் பெரிய தோல்வி. எங்களைப் பொறுத்தவரைக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறோம் நாங்கள்.

### சர்வாதிகார தனத்திற்கு முற்றுப்புள்ளி!

**நெறியாளர்:** பொதுவாக, பிரதமருக்குக் கடிதம் எழுதினால், அவரிடம் இருந்து பதில் வருவது, நேரம் கொடுப்பது; முக்கியமான ஒரு பிரச்சினை என்றால், ஆலோசனை செய்யலாம் வாருங்கள் என்று முதலமைச்சர்களை அழைப்பதுத ஒரு மரபாக இருக்கும். இந்தப் பிரச்சினையில், அது மாதிரியான எந்த ஆலோசனையும் நடக்கவில்லையா?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தி.மு.க. மட்டும் இல்லை; எந்த மாநிலத்தின் முதலமைச்சரி டமும் பேசவில்லை. எந்தக் கட்சித் தலைவரிடமும் பேசவில்லை. அதுகுறித்த எந்த ஆலோசனையும் கிடையாது. இது எவ்வளவு பெரிய விஷயம் – அதைப்பற்றி ஆலோசனை செய்யாமல், திடீரென்று அந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து, ஒரு பெரிய சர்வாதிகாரமாக நடந்துகொண்டார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இருக்கிறது.

### பெண்களுக்கான இடஒதுக்கீட்டை முகமூடியாக பயன்படுத்தும் பா.ஜ.க.!

**நெறியாளர்:** பி.ஜே.பி. இதில் முன் வைக்கிற ஒரு விமர்சனம், பெண்களுக்கு இட ஒதுக்கீடு தருவதற்கு நாங்கள் சட்டம் கொண்டு வந்தோம். தி.மு.க., காங்கிரஸ், இந்தியாவில் இருக்கிற எல்லா எதிர்க்கட்சிகளும், பெண்கள் முன்னேறுவதை விரும்பவில்லை. அதனால், அந்தச் சட்டத்தை எதிர்த்துத் தோற்கடித்துவிட்டார்கள் என்று ஒரு பரப்புரையை செய்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டிற்கு உங்கள் பதில் என்ன?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பெண்களுக்கு இட ஒதுக்கீடு என்பதை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, 2023 ஆம் ஆண்டில் 33% இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அன்றைக்கே கொண்டு வந்தாயிற்று. அப்பொழுதே அதை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கவேண்டும். ஒன்றிய பா.ஜ.க. அரசு நாளைக் கடத்திவிட்டார்கள்.

அதை எல்லாருமே ஆதரித்தோம். அந்தப் பெண்கள் இட ஒதுக்கீட்டை எல்லா கட்சியும் ஆதரித்தது.. தி.மு.க.வும் மனப்பூர்வமாக ஆதரித்தது. ஏற்கனவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு மட்டும் இல்லை, 50% இட ஒதுக்கீட்டினை மாநகராட்சிகளில் கொடுத்திருக்கிறோம். நகராட்சியில் கொடுத்திருக்கிறோம். 50 சதவிகிதத்திற்கும் மேலே தமிழ்நாட்டில் பெண் மேயர்கள் இருக்கிறார்கள். ஒன்றிய பா.ஜ.க. அரசு, தொகுதி மறுவரையைக் கொண்டு வருவதற்காக, ஒரு முகமூடியைத் தயார் செய்து, அந்த முகமூடியாகத்தான் பெண்கள் இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்தினார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

### எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைதான் காரணம்!

**நெறியாளர்:** இந்திய நாடாளுமன்ற வரலாற்றில், கடந்த 10, 12 ஆண்டுகளாக எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், நரேந்திர மோடி அவருடைய அரசு கொண்டு வந்தால், அதை நிறைவேற்றி விடுவார்கள். அது 370 ஆக இருக்கலாம்; காஷ்மீராக இருக்கலாம். சர்ச்சைக்குரிய எந்த மசோதாவாக இருந்தாலும், அவர்களுக்கு இருக்கும் மெஜாரிட்டியால் அதை நிறைவேற்றி விடுவார்கள். முதல் முறையாக ஒரு பெரிய தோல்வியை சந்தித்திருக்கிறார் மோடி. இதற்கு அரசியல் முக்கியத்துவம் என்ன?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைதான், இதனுடைய வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது. வட இந்தியா – தென்னிந்தியா என்று சொல்லிப் பிரிக்கப் பார்த்தார்கள். ஆனால், இந்தப் பிரச்சினையில், எல்லாரும் ஒற்றுமையாக இருந்து, அந்த வேறுபாடு பார்க்காமல், ஒற்றுமையாக இருந்ததினால்தான் இதில் வெற்றி அடைந்திருக்கிறோம்.

இதில், உத்தரப்பிரதேசத்திற்கு அதிகமான தொகுதி கிடைக்கிறது என்று அகிலேஷ் ஏமாந்து போய்விடவில்லை. அதில் உள்ள சூழ்ச்சியைப் புரிந்துகொண்டு, அவரும் அந்த மசோதாவை கடுமையாக எதிர்த்தார். ஆனால், இங்கே இருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமி, 'சப்போர்ட்' செய்தார். அமித்ஷா சொல்வதுதான் சரி; அதைத்தான் கேட்கவேண்டும் என்கிற மாதிரி அவர் ஒரு பிரச்சாரம் செய்தார்.

ஆக, மோடியைப் பொறுத்தவரையில், இது அவருக்குத் தோல்வி; எடப்பாடி பழனிசாமியைப் பொறுத்தவரைக்கும் இது பெரிய துரோகம்.

### தமிழ்நாட்டிற்கு எதையும் செய்யாதவர்!

**நெறியாளர்:** மிகத் தீவிரமான அரசியலைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். அதற்கிடையில், நீங்கள் சந்தித்த தலைவர்கள், நீங்கள் பார்க்கின்ற பிரபலங்கள், அவர்களைப்பற்றி உங்கள் எண்ணம் என்னவென்று தெரிந்துகொள்ள விரும்புகி றேன். ஒரு வரியில் சொன்னால் போதும்? பிரதமர் மோடி!

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பிரதமர் மோடி, தமிழ்நாட்டுக்கு எதையும் செய்யாத ஒரே பிரதமர்.

**நெறியாளர்:** சோனியா காந்தி?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** சோனியா காந்தி, எல்லோரையும் அரவணைத்து அரசியல் நடத்திக் கொண்டிருக்கக்கூடியவர்.

**நெறியாளர்:** ராகுல் காந்தி?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** நம்பிக்கை நட்சத்திரம்; ஒரு சிறந்த போராளி!

**நெறியாளர்:** எடப்பாடி பழனிசாமி?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** எடப்பாடி பழனிசாமி, தமிழர்களுக்கான உரிமையை இதுவரை கேட்காத ஒரு தமிழர்.

**நெறியாளர்:** சீமான்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** சீமான், ஒரு நல்ல பேச்சாளர்.

**நெறியாளர்:** விஜய்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** ஒரு நல்ல நடிகர்.

**நெறியாளர்:** ரஜினிகாந்த்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** என்றென்றும் சூப்பர் ஸ்டார். நான் அடிக்கடி பேசுகின்ற ஒரு நல்ல நண்பர்.

**நெறியாளர்:** கமல்ஹாசன்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** உள்ளூரை பேசுகின்ற உலக நாயகன்.

**நெறியாளர்:** பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தால், என்ன கேட்பீர்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** எய்ம்சை சீக்கிரம் கட்டி, திறப்பதற்கு வாருங்கள் என்று கேட்பேன். வெறுப்பில்லாத ஓர் அன்பான இந்தியாவை உருவாக்குங்கள் என்று கேட்டேன்.

### பெரிய மாற்றத்தை கொண்டு வந்து பெரிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளோம்!

**நெறியாளர்:** இந்தத் தேர்தல் பரப்புரையில் ஒளிக்கிற இன்னொரு சொல், "மாற்றம்" அதற்கு உங்கள் பதில்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** இது, தேர்தலுக்குத் தேர்தல் சொல்லக்கூடிய வார்த்தைதான் இது. மாற்றம் என்பது முன்னேற்றமாக அமையவேண்டும். பின்னோக்கி செல்லக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு, எல்லாத் துறைகளிலேயும் பெரிய பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்து, பெரிய புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறோம்.

கல்வித்துறையில், மருத்துவத் துறையில், பொருளாதாரத் துறையில், தொழில் துறையில் இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். எல்லாத் துறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்திருக்கிறோம். அப்படிப் பட்ட மாற்றம்தான் தேவை நாட்டுக்கு. எங்களைத் தவிர, யார் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்?

### உங்களுக்கு இந்த ஸ்டாலின் மீண்டும் வேண்டும்!

**நெறியாளர்:** நிறைவாக ஒரு கேள்வி! மக்கள் ஏன் உங்களுக்கு ஓட்டுப் போட வேண்டும்? "மீண்டும் ஏன் ஸ்டாலின்?"

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** நான் பொறுப்புக்கு வந்து, கடந்த அய்ந்து ஆண்டுகளில், என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தேனோ, அதையெல்லாம் முடிந்த வரைக்கும் செய்து முடித்துவிட்டேன். அதில் எனக்கு முழுத் திருப்தி. இருந்தாலும், கட்டமைப்பை மிக உறுதியாகக் கட்டிவிட்டோம். இன்னும் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது; அதையும் செய்வோம். செய்யத்தான் போகிறோம், அது உறுதி! அதற்காகத்தான் இந்த ஸ்டாலின் உங்களுக்கு மீண்டும் வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

## உங்கள் எண்ணம் ... ஒரு வரியில்!

**நெறியாளர்:** மிகத் தீவிரமான அரசியலைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். அதற்கிடையில், நீங்கள் சந்தித்த தலைவர்கள், நீங்கள் பார்க்கின்ற பிரபலங்கள், அவர்களைப்பற்றி உங்கள் எண்ணம் என்னவென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒரு வரியில் சொன்னால் போதும்? பிரதமர் மோடி!

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** பிரதமர் மோடி, தமிழ்நாட்டுக்கு எதையும் செய்யாத ஒரே பிரதமர்.

**நெறியாளர்:** சோனியா காந்தி?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** சோனியா காந்தி, எல்லோரையும் அரவணைத்து அரசியல் நடத்திக் கொண்டிருக்கக்கூடியவர்.

**நெறியாளர்:** ராகுல் காந்தி?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** நம்பிக்கை நட்சத்திரம்; ஒரு சிறந்த போராளி!

**நெறியாளர்:** எடப்பாடி பழனிசாமி?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** எடப்பாடி பழனிசாமி, தமிழர்களுக்கான உரிமையை இதுவரை கேட்காத ஒரு தமிழர்.

**நெறியாளர்:** சீமான்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** சீமான், ஒரு நல்ல பேச்சாளர்.

**நெறியாளர்:** விஜய்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** ஒரு நல்ல நடிகர்.

**நெறியாளர்:** ரஜினிகாந்த்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** என்றென்றும் சூப்பர் ஸ்டார். நான் அடிக்கடி பேசுகின்ற ஒரு நல்ல நண்பர்.

**நெறியாளர்:** கமல்ஹாசன்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** உள்ளூரை பேசுகின்ற உலக நாயகன்.

**நெறியாளர்:** பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தால், என்ன கேட்பீர்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** எய்ம்சை சீக்கிரம் கட்டி, திறப்பதற்கு வாருங்கள் என்று கேட்பேன். வெறுப்பில்லாத ஓர் அன்பான இந்தியாவை உருவாக்குங்கள் என்று கேட்டேன்.

# தொகுதி மறுவரையறை: எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையால் வெற்றி!